# சிறீ லங்கா:
# தமிழ்ப் புலிகளினால் சிறார்கள் பலவந்தமாக படைகளில் சேர்ப்பு

(2004, 11 நவம்பர், நியூயோர்க்) 2002ம் ஆண்டு தீவிரமான மோதல் நிலமைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் சிறீ லங்காவில் கிளர்ச்சிக்கார தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமானது குடும்பங்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியும், பலவந்தமாக கடத்தியும் ஆயிரக்கணக்கான சிறார்களை படைகளில் சேர்த்துக் கொண்டுள்ளதாக, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது இன்று வெளியிட்ட அறிக்கையின் மூலம் தெரிவிக்கின்றது.

சிறீ லங்காவில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் குடும்பங்களை அச்சுறுத்தியும் துன்புறுத்தியும் அவர்கள் மீது அழுத்தங்களை ஏற்படுத்தியும் இக்குடும்பங்களின் பிள்ளைகளை தமது இராணுவ சேவைக்கு வழங்குமாறு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE அல்லது தமிழ் புலிகள்) வலியுறுத்தி வருகின்றனர். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கொடுக்க மறுக்கின்ற பட்சத்தில், அச்சிறார்கள் வீடுகளில் இருந்து இரவு நேரங்களில் பலவந்தமாக கொண்டு செல்லப் படுகின்றனர், அல்லது பாடசாலைக்கு செல்லும் வழியில் பலவந்தமாக கொண்டு செல்லப்படுகின்றனர். தமது பிள்ளைகள் படைகளில் சேர்க்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற பெற்றோர்கள் புலிகள் இயக்கத்தின் வன்முறைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள், அல்லது அவர்களால் கைது செய்யப்படுகிறார்கள்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின், சிறார்கள் உரிமை தொடர்பான நியாய பிரச்சார பணிப்பாளரும் (Children’s Rights Advocacy Director) இவ்வறிக்கையின் இணை ஆசிரியருமான ஜோ பேக்கர் கூறுகையில் “யுத்த நிறுத்தமானது சண்டையை முடிவுக்கு கொண்டு வந்தாலும், சிறார்களைப் படையில் சேர்க்கும் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வரவில்லை. ‘சமாதானத்தினால் கிடைக்கும் நற் பலாபலனை’ எதிர்பார்த்து ஆவலாய் இருந்த அநேக தமிழ் குடும்பங்கள், இன்று தம் பிள்ளைகளை படைகளில் சேர்க்க வரும் ஆயுதம் தாங்கிய தமிழ் புலிகளின் வேண்டத் தகாத வருகையை எதிர்பார்த்து இருக்கின்றனர்.

“அச்சத்திற்குள் வாழ்தல் : சிறீ லங்காவில் தமிழ்ப் புலிகளும் சிறார் படையினரும்” எனத் தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள எண்பது பக்கங்களைக் கொண்ட இவ் அறிக்கையானது சிறீ லங்காவில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நாளில் இருந்து, தமிழ் புலிகளால் பலவந்தமாக கொண்டு செல்லப்பட்ட, வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல சிறார்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட நேரடியான வாக்கு மூலங்களை உள்ளடக்கி இருக்கிறது. கனரக ஆயுதங்கள், வெடிகுண்டுகள் மற்றும் கண்ணிவெடிகள் என்பவை தொடர்பான பயிற்சி உட்பட, மிக கடுமையான, சில வேளைகளில் மிகக் கொடுமையான பயிற்சிகளுக்கு தாம் முகம் கொடுத்ததாக இச் சிறார்கள் விபரிக்கிறார்கள். தப்பியோட எத்தனிப்பவர்களுக்கு தமது படையணியின் முன்னால் வைத்தே பகிரங்கத் தண்டனை கொடுப்பதன் மூலம் மற்றவர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் (UNICEF) ஆவணப் படுத்தப்பட்டுள்ள சம்பவங்களின் அடிப்படையில், 2002ம் ஆண்டு பெப்பரவரி மாதத்தில் அரசாங்கத்தோடு மேற்கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் 3,516 சிறார்கள் தமிழ் புலிகளால் படைகளில் சேர்த்து கொள்ளப்பட்டனர். இவ் எண்ணிக்கையானது, உண்மையாக அவர்களால் படைகளில் சேர்த்து கொள்ளப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையின் ஒரு பகுதி மட்டுமே என்று யுனிசெப் அமைப்பு மேலும் கூறுகிறது.

இவ் வருட ஆரம்பத்தில் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற பிரிவினரால் விடுவிக்கப்பட்ட சிறார்களை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தீவிர மீள் ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்பாகவும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இவ்வறிக்கையில் ஆவணப்படுத்தி உள்ளது. வடக்குப் பிரதேசத்தில் வன்னி என அழைக்கப்படும் பகுதியில் நிலை கொண்டுள்ள, வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விசுவாசமான பிரதான புலிகள் இயக்க படையணிகளில் இருந்து கிழக்கு மாகாண புலிகள் இயக்கத்தின் தளபதியாக இருந்த கேணல் கருணா இவ்வருட மார்ச் மாதத்தில் பிரிந்து சென்றார். ஏபரல் மாதத்தில் வன்னிப் புலிகள் என அழைக்கப்படும் பிரபாகரனின் படைகள் கருணாவின் கிழக்கு படைகள் மீது தாக்குதல்களை தொடுத்து அவர்களை தோற்கடித்ததனால் அது உடனடியாக கலைக்கப்பட்டது. சுமார் 2,000 சிறார் போராளிகள் கருணா படையில் இருந்து ஓடினார்கள், அல்லது படையை விட்டு செல்லும் படி அவர்களின் தளபதிகளினாலேயே ஊக்குவிக்கப் பட்டார்கள். பலர் சண்டையில் இறந்துபோயினர்.

சிறார்கள் உட்பட, கருணாவின் முன்னாள் படையினர்களை மீள படைகளில் சேர்த்துக் கொள்வதற்காக வன்னிப் புலிகள் இயக்கமானது மிகத் தீவிர பிரச்சாரத்தை உடனடியாக மேற்கொண்டார்கள். வன்னிப் படையினர், வீடு வீடாக சென்றும், கிராமங்களில் கூட்டங்களை நடத்தியும் மோட்டார் வாகனங்களைப் பாவித்து அறிவித்தல்களை விடுத்தும், சிறார்களுக்கு கடிதங்களை அனுப்பியும், முன்னாள் சிறார் போராளிகள் மீண்டும் தமது படைகளில் வந்து சேரவேண்டும் என வலியுறுத்தினார்கள். பல சிறார்களை அவர்கள் பலவந்தமாகவே எடுத்து சென்றனர்.

“அன்றைய தினம் அவர்கள் எனது தம்பியை எடுத்து சென்று விட்டார்கள். அவன் சந்தையில் இருந்து வீட்டுக்கு திரும்பும் வழியிலேயே கொண்டு செல்லப்பட்டான்” என தெரிவித்த வாஞ்சி, 1997ம் ஆண்டில் தனது 16வது வயதில் புலிகள் இயக்கத்தினால் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். “அவர்கள் என் தம்பியை விடுவிக்கவில்லை, அதே வேளை இக்கடத்தல் பற்றி நான் யாருக்காவது அறிவித்தால் என்னையும் சுட்டு விடுவதாக அச்சுறுத்தினார்கள், அத்துடன் நானும் அவர்களுடன் மீள இணைந்துகொள்ள வேண்டும் என எச்சரித்தனர்”.

ஆயுத மோதல்களில் சிறார்களை ஈடுபடுத்துவது, அரச சார்பற்ற ஆயுதக் குழுக்களால் 18 வயதுக்கு குறைந்த சிறார்கள் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவது என்பவை சர்வதேச சட்டங்கள் மூலம் தடை செய்யப்பட்டுள்ளன. 15 வயதிற்கு குறைந்த சிறார்களைப் படைகளில் சேர்ப்பது என்பது இப்போது ஓர் யுத்தக் குற்றமாகவே (War Crime) கருதப்படுகிறது.

புலிகள் இயக்கமானது தாங்கள் சிறார்களை படையில் சேர்த்துக் கொள்ளும் விடயத்தை மறுப்பதோடு, தமது படைகளில் வந்து இணையும் சிறார்கள் வறுமை, போதிய கல்வி வாய்ப்புக்கள் இல்லாமை, அல்லது யுத்தத்தில் தமது பெற்றோர்களை இழந்தமை மற்றும் வீடுகளில் சரியான கவனிப்பு இன்மை போன்றவற்றினாலேயே தம்முடன் வந்து இணைந்து கொள்வதாக கூறுகிறார்கள். சுதந்திரமான தமிழ் தேசம் ஒன்றுக்காக போராட வேண்டும் என்னும் நோக்கிலும், அல்லது சமூக பொருளாதார காரணிகளின் அடிப்படையிலும் சில சிறார்கள் போய்ச் சேர்ந்து கொண்டாலும், அவ்வாறு “சுயமாக” செல்லும் சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வது கூட சர்வதேச சட்டத்தை மீறுகின்ற செயலாகும்.

2003ம் ஆண்டு யூன் மாதத்தில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான முறையான ஓர் செயல் திட்டத்தை (Action Plan) நடைமுறைப்படுத்த சிறீ லங்கா அரசாங்கமும் புலிகள் இயக்கமும் ஏற்றுக்கொண்டன. அச் செயற் திட்டத்தின் கீழ் சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வதை முடிவுக்கு கொண்டு வருவது, மற்றும் தமது படையில் இருக்கும் சிறார்களை, ஒன்றில் நேரடியாக அவர்களின் பெற்றோர்களுக்கு திருப்பி கொடுப்பது, அல்லது இதற்காகவே நிர்மாணிக்கப்பட்ட இடைமாற்ற நிலையங்களிடம் (Transit Centers) பிள்ளைகளைப் பாரம் கொடுப்பது என்று புலிகள் இயக்கமானது ஏற்றுக் கொண்டது.

ஆனால் இச்செயல் திட்டம் கையொப்பமிடப்பட்ட நாளில் இருந்து, புலிகள் இயக்கமானது தாம் விடுவித்த சிறார்களின் தொகையைவிட இரட்டிப்பாக தமது படைகளில் சிறார்களை சேர்த்துக் கொண்டுள்ளனர் என்பதையே, யுனிசெப் அமைப்பின் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திறக்கப்பட்ட இடைமாற்ற நிலையமானது அதன் ஒரு வருடகால செயற்பாட்டில் 172 சிறார்களை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளது. அவ் இடைமாற்ற நிலையமானது 100 சிறார்களை ஒரே நேரத்தில் வைத்திருக்கக் கூடிய வசதியைக் கொண்டிருந்தாலும் அது ஒரு பொழுதுமே 49 சிறார்களுக்கு மேல் கொண்டிருக்கவில்லை, அத்துடன் 2004ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆறு வார காலத்திற்கு அது முழுமனே வெறுமையாகவே இருந்தது. சிறார்களின் வரவு மிக குறைந்து காணப்பட்டதினால் மற்றைய இரு இடைமாற்ற நிலையங்களும் திறக்கப்படவே இல்லை.

“காலத்திற்கு காலம் மீண்டும் மீண்டும், புலிகள் இயக்கமானது தாங்கள் சிறார்களை படையில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டுவருவதாக வாக்குறுதிகளை அளித்தாலும், ஒவ்வொரு முறையும் அவர்கள் தமது வாக்கை மீறியே வந்துள்ளனர்” என பேக்கர் கூறினார். “புலிகள் இயக்கமானது, சிறார்களை படைகளில் சேர்ப்பதை நிறுத்தி, சட்டரீதியான பொறுப்புக்களுக்கு அமைவாக நடந்து கொள்வதற்கான காலம் இப்போது வந்து விட்டது”.

***“அச்சத்திற்குள் வாழ்தல் : சிறீ லங்காவில் தமிழ்ப் புலிகளும் சிறார் படையினரும்”*** என்னும் அறிக்கையில் இருந்து நேரடி வாக்கு மூலங்கள்:

*குறிப்பு:* இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள சிறார்களின் பெயர்கள் அவர்களின் உண்மை பெயர்கள் அல்ல.

*எனது பெற்றோர்கள் என்னை புலிகள் இயக்கத்திடம் ஒப்படைக்க மறுத்து விட்டதனால் அவர்களில் பத்துப் பதினைந்து பேர் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களில் சீருடை தரித்த ஆண்களும் பெண்களும் கைகளில் றைபிள்களும், இடைப்பட்டிகளில் கட்டப்பட்ட துப்பாக்கிகளோடும் வந்திருந்தனர்.... என்னை கொண்டு செல்வதற்கு அவர்கள் வந்த அந்த அதிகாலை நேரம் நான் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தேன். முதலில் அவர்கள் எங்கள் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். எனது சிறிய தாயாராக இருக்கலாம் என்ற நினைப்பில் எனது தாயார் வாசல் கதவைத் திறந்தார். .....திடீர் என வீட்டுக்குள் நுழைந்த அவர்கள் என்னை தற தறவென்று வீட்டுக்கு வெளியே இழுத்துச் சென்றனர். “என்ன செய்கிறீர்கள், என்ன நடக்கிறது இங்கே?” என எனது தந்தையார் அவர்களை நோக்கி கத்தினார். ஆனால் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சில சிப்பாய்கள் எனது தந்தையை அருகில் இருந்த புதர்களை நோக்கி இழுத்துச் சென்று அவரை கடுமையாக தாக்கினார்கள்... அதை தடுக்க முயன்ற எனது தாயாரை அவர்கள் கீழே தள்ளி விழுத்தினார்கள்*

-ரஞ்சினி, 2003ம் ஆண்டில் தனது 16வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட பெண்பிள்ளை.

*நான் 5ம் வகுப்புவரை பாடசாலைக்குச் சென்றேன். எனது அப்பாவும் அம்மாவும் இறந்ததினால் நான் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திவிட்டேன். என்னை கவனிப்பார் யாரும் இல்லை. எனக்கு பெற்றோர்கள் இல்லை, ஆகவே எனக்கு புலிகளுடன் இணைவதற்கு விருப்பம் இருந்தது. எனது பெற்றோர்கள் இறந்த பின் நான் எனது சிறிய தாயாருடன் இருந்தேன்.. நான் அவர்களின் குடும்பத்திற்கு சமைத்தேன். எனது வாழ்க்கையைப் பற்றி எனக்கு விரக்தி இருந்தது. ஆகவே நான் புலிகளுடன் இணைந்து கொள்ள விரும்பினேன். இந்த உலகில் ஒருவருடைய உதவியும் இல்லாமல் நான் வாழ*

*வேண்டும் என விரும்பினேன். நான் புலிகளின் அரசியல் காரியாலயத்திற்குச் சென்று, நான் புலிகளில் சேர விரும்புகிறேன் என்று சொன்னேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். எனக்கு 16வயது என்று நான் அவர்களிடம் சொன்னேன். ஆனால் அவர்கள் அதைப்பற்றி அக்கறைப் படவில்லை.*

- வான்மதி, 2003ம் ஆண்டில் தனது 16வது வயதில் புலிகள் இயக்கத்தில் இணைந்த பெண்பிள்ளை.

*பயிற்சிகள் மிகவும் கடினமாக இருந்தன. அவர்கள் மழையையோ வெயிலையோ பொருட்படுத்துவது இல்லை. நீங்கள் அதிகம் களைப்படைந்தால், உங்களால் பயிற்சியை தொடரமுடியாது இருந்தால், அவர்கள் உங்களை அடிப்பார்கள். எனக்கு ஆரம்ப காலங்களில் ஒருமுறை தலை சுற்றியது. என்னால் தொடர முடியவில்லை, நான் சற்று ஓய்வு கேட்டேன். ''இது விடுதலைப் புலிகள் இயக்கம். பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். ஓய்வெடுக்க முடியாது'' என்று கூறினார்கள். என்னை கைகளால் நான்கு ஐந்து முறை அடித்தார்கள்..*

- செல்வமணி, 2003ம் ஆண்டில் தனது 15வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட பெண்பிள்ளை.

*நான்கு மாதங்களின் பின் என்னை அவர்கள் கண்ணிவெடிப் பிரிவிற்குள் அனுப்பினார்கள். நான் கண்ணிவெடிகளை எப்படிக் கையாளுவது, புதைப்பது என்பதைப் படித்தேன். நான் இதை நான்கு மாதங்களாகச் செய்தேன். என்னால் அதில் கவனம் செலுத்த முடியவில்லை. சில வேளைகளில் கண்ணிவெடி வெடித்து பிள்ளைகளின் கை, கால், முகம் என்பன காயப்பட்டிருக்கிறன. ஒரு முறை, நாங்கள் வரிசையாக வேலை செய்துகொண்டிருக்கும் பொழுது, கடைசியாக நின்றவள் கண்ணிவெடி அகற்றுவதில் தவறு விட்டுவிட்டாள். அது வெடித்து அவளின் விரல் இல்லாமல் போய்விட்டது. அவளுக்கு 17 வயது. கண்ணிவெடிகளைக் கையாளுவதில் எனக்கு சரியான பயம்.*

-விமலா, 2003ம் ஆண்டில் தனது 17வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட பெண்பிள்ளை.

*அதிகமானோர் தப்பி ஓட முயற்சித்தார்கள். ஆனால் நீங்கள் பிடிபட்டால் மீண்டும் முகாமிற்கு கொண்டு சென்று அடிப்பார்கள். சில பிள்ளைகள் இறந்திருக்கிறார்கள். நீங்கள் இரண்டு முறை தப்பியோட முயற்சித்தால் உங்களை சுட்டு விடுவார்கள். எனது அணியில் யாராவது தப்பியோடினால் எனது அணி வரிசையாக நின்று அவர்கள் அடிக்கப் படுவதைப் பார்க்க வேண்டும். மற்ற குழுக்களில் சிலருக்கு இது நடந்ததை நான் பார்த்திருக்கிறேன். அந்த நபர் இறந்துவிட்டால் அவர்கள் எங்களுக்கு சொல்லமாட்டார்கள், ஆனால் இவ்வாறு நடக்கிறது என்று எமக்குத் தெரியும்.*

- நிர்மலா, 2003ம் ஆண்டில் தனது 14வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட பெண்பிள்ளை.